# மதுவரிக் கட்டளைச் சட்டம்

## மதுவரி அறிவித்தல் இல: 04/2018

### மதுவரி அறிவித்தல் இல. 666 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்தியமைத்தல்

காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதிய **2053/26** ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி இல. 02.'.2018 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 69/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 666 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலிலுள்ள அட்டவணையானது,

(1) 5 ஆம் பந்தியில் (v) ஆம் உப பந்தியினை இரத்துச்செய்து அதற்குப் பிரதியீடாக பின்வரும் உப பந்தியினை உட்புகுத்துவதன் மூலம்,,

“ (v) 18 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் எந்த வயதுத் தரத்தினையுடைய பெண்கள், ஆயினும் எவ்வாறாயினும், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற நிலையம் ஒன்றில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பெண்கள், ஹோட்டல் பணியாளர்களாக மாத்திரம் வேலைக்கமர்த்துவதற்கு மதுவரி ஆணையாளர் நாயகம் தனது சுயவிருப்பத்திற்கமைய அங்கீகாரம் வழங்கலாம்”

(2) 11 ஆம் பந்தியில் உப பந்தி (இ) பந்திக்கு உடனடுத்து உடனடியாக பயன்வலுப்பெறும் வகையில் உப பந்தி (ஈ) இனை புதிதாக உட்புகுத்தல்.

“ (ஈ) தவரணை ஒன்றில் பணிபணியாற்றுகின்ற எவரேனுமொரு பெண்ணுக்கு , அல்லது “

மூலம் திருத்தியமைக்கப்படுகிறது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 01,
2018 சனவரி மாதம் 18 ஆந் திகதி